தேதி : 11.03.2026

Spl.C.C. : 10/2023

PW. : 2

பெயர் : **திரு.பாலாஜி**

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **12th March 2026.**

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர். It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

(*சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)*

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எனது அப்பா பெயரில் Golden city ல் இடம் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். யாரிடமிருந்து எந்த தேதியில் எனது அப்பா கிரையம் பெற்றார் என்றால் தெரியவில்லை. வீடு புதியதாக கட்டிய வீடா அல்லது பழைய வீடா என்றால் புதியதாக கட்டிய வீடு, அப்பா தான் அந்த வீட்டை கட்டினார். அப்பா பெயரில்தான் வீட்டு வரி ரசீது, EB

இணைப்பு ஆகியவை உள்ளது என்றால் சரிதான். எந்த தேதியில் இனாம் Settlement எனது அப்பா எழுதி கொடுத்தார் என்றால் 13.03.2023 எழுதிகொடுத்தார். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் அண்ணன் மற்றும் அக்கா என்னுடன் பிறந்தவர்கள்.

2. நான் பெயர் மாற்றம் செய்யக்கூடிய காலக்கட்டத்தில் பஞ்சாயத்து கிளார்க் strike ல் இருந்தார்கள் என்றால் நான் மனு கொடுக்கும் சமயத்தில் strike இல்லை, அதன் பிறகுதான். எவ்வளவு நாட்கள் strike ல் இருந்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வரி வசூல் செய்வது ஊராட்சி செயலாளர் என்றால் சரிதான். அந்தசமயத்தில் யார் ஊராட்சி செயலாளராக இருந்தார் என்றால் பெயர் தற்சமயம் ஞாபகமில்லை. நான் மனு கொடுக்கும் காலக்கட்டத்தில் வரி பாக்கி இருந்தது என்றால் இரண்டு ஆண்டு கால வரி பாக்கி இருந்தது. மனு கொடுக்கும் காலக்கட்டத்தில் நான் வரி பாக்கியை செலுத்தவில்லை என்றால் சரிதான். வரி பாக்கியை செலுத்தாமல் பெயர் மாற்றம் செய்ய முடியாது என்றால் வரி பாக்கி இருக்கும் விபரமே நான் மனு கொடுத்த பிறகுதான் எனக்கு தெரிந்தது. எனது அப்பா வரி அனைத்தையும் செலுத்தியிருப்பார் என நினைத்தேன். அந்த மனு எந்த தேதியில்

கொடுத்தேன் என்றால் 28.03.2023 ல் கொடுத்தேன். அலுவலகத்தில்தான் கொடுத்தேன்.

3. நான் கொடுத்த மனுவில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மனுவினை யார் எழுதியது என்றால் பழனிகுமார் என்ற பழக்கப்பட்ட அண்ணன் ஒருவர் எழுதினார். நான் எவ்வளவு படித்துள்ளேன் என்றால் 10 வது படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். மனு கொடுக்கும் போது பஞ்சாயத்து அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள்.

4. நான் சொன்னது போல், சொன்ன தேதியில் பெயர்மாற்றம் செய்ய கோரி மனு எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் பின்னிட்டு வழக்கிற்காக மேற்படி ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. அந்த விபரங்கள் எனக்கு தெரியாத காரணத்தினால்தான் முதல் விசாரணையில் அந்த மனுவினை நான்தான் எழுதினேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோயம்புத்தூரில் வேலை பார்த்தேனா என்றால் ஆமாம். மனு கொடுத்துவிட்டு கோயம்புத்தூருக்கு வேலைக்கு சென்று விட்டேனா என்றால் ஆமாம். எந்த தேதியில் திரும்ப

வந்தேன் என்றால் 09.04.2023 ம் தேதி வந்தேன்.

5. 10.04.2023–ம் தேதி ஊராட்சி செயலாளர் Strike ல் தான் இருந்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் சென்று அன்றைய தினம் 1ம் எதிரியுடன் பேசும்போது ஊராட்சி செயலாளர் அங்கு இல்லை என்றால் சரிதான். அப்போதுதான் இரண்டு வருடங்கள் வரி நிலுவையில் உள்ள விபரங்கள் குறித்து கூறினாரா என்றால் ஆமாம், அப்போதுதான் அலுவலக செலவிற்காக ரூ.15000/– கூடுதலாக கேட்டார். நிலுவையிலிருந்த வீட்டு வரியை செலுத்தினேனா என்றால் அப்போது செலுத்தவில்லை. நிலுவையிலிருந்த வீட்டு வரியை செலுத்தினால்தான் பெயர்மாற்றம் செய்ய முடியும் என்று 1வது எதிரி கூறினாரா என்றால் இல்லை. வரி பாக்கி செலுத்தினால் தான் பெயர் மாற்றம் செய்ய இயலும் என்று 1வது எதிரி கூறினார் என்றாலும் அதை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. ஊராட்சி செயலாளர் போராட்டத்தில் இருப்பதால் அவர்கள் போராட்டம் முடிந்து பணிக்கு திரும்பிய பிறகு தான் வரி வசூல் செய்ய இயலும் என்ற தகவலை 1வது எதிரி என்னிடம் தெரிவித்தார் என்றாலும் அதன் பின்புதான் வரிப்பணத்தை பெற்று பெயர்மாற்றம் செய்ய முடியும்

என்று கூறினார் என்றால் சரியல்ல. அலுவலக செலவிற்காக 1வது எதிரி பணம் கேட்டவுடன் நான் சென்று புகார் எதுவும் தெரிவித்தேனா என்றால் ஆமாம், அதன்பிறகு ஒரு முறை 1வது எதிரியை சந்தித்து பெயர்மாற்றம் குறித்து கேட்டுவிட்டு அதன்பிறகுதான் புகார் கொடுத்தேன்.

7. முதல் முறை நான் சென்று கேட்ட பிறகு நான் வேலைக்காக கோயம்புத்தூர் சென்றுவிட்டேனா என்றால் ஆமாம். நான் முதல் முறை எதிரியின் அலுவலகத்திற்கு செல்லும்போது என்னுடன் யாரும் வரவில்லை என்றால் சரிதான். ஊர்த்திருவிழாவிற்காக கிராமத்திற்கு எந்ததேதியில் வந்தேன் என்றால் 09.04.2023 அன்று வந்தேன். 2வது முறை எந்த தேதியில் 1வது எதிரியை பார்த்தேன் என்றால் தேதி சரியாக ஞாபகமில்லை. எத்தனை மணிக்கு பார்த்தேன் என்றால் மதிய நேரத்தில்தான் பார்த்தேன், சுமார் 12.30 மணி இருக்கும். அப்போது அலுவலகத்தில் அனைவரும் இருந்தார்களா என்றால் ஆமாம். என்னுடன் வேறு யாரேனும் வந்தார்களா என்றால் இல்லை. நான் 1வது எதிரியிடம் பேசிய விபரங்கள் அலுவலகத்தில் உள்ள மற்ற நபர்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது.

8. நான் 2வது முறை 1வது எதிரியை சந்திக்க செல்லும்போது

பணம் எதுவும் எடுத்துச் சென்றேனா என்றால் இல்லை. அந்த சமயத்தில் நிலுவையிலிருந்த வரிபாக்கியையும் கட்டவில்லை என்றால் சரிதான். நான் 09.05.2023 அன்று 1வது எதிரியை சந்தித்து ரசீது என்ன ஆனது என கேட்டு அவர் லஞ்சப்பணம் ரூ.15000/-ஐ தயார் செய்துவிட்டேனா என்று கேட்டதாக இவ்வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 09.05.2023 அன்று சென்று நான் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. 11.05.2023 அன்றைய தினம் நான் வரிபாக்கியை செலுத்தினேனா என்றால் இல்லை. அந்த தேதியில் அலுவலகத்தில் அனைவரும் இருந்தார்களா என்றால் 1ம் எதிரி அலுவலகத்தின் வெளியே இருந்ததால் நானும் அவர் நின்ற இடத்திலேயே நின்று பேசிவிட்டு வந்துவிட்டேன். அலுவலத்திற்குள் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி சங்கதியை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் தற்சமயம் ஞாபகமில்லை. 11.05.2023 அன்று 1வது எதிரி லஞ்சம் கேட்பதாக சொல்லி புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை.

9. காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கச் செல்லும் போது என்னுடன் யார் வந்தது என்றால் நான் மட்டும்தான் சென்றேன். புகாரை யார் எழுதியது என்றால் கல்லலில் உள்ள ஒரு Computer center ல் நான்

தட்டச்சு செய்து நான் கொண்டு சென்றேன். எந்த computer center என்றால் பெயர் ஞாபகமில்லை, பஸ் ஸ்டாண்ட் அருகில் உள்ளது. மேற்படி Computer centre எத்தனை மணிக்கு திறப்பார்கள் என்றால் காலை 6.30, 7.00 மணியளவில் திறந்து விடுவார்கள். புகாரை தட்டச்சு செய்து கொடுத்த நபரின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. பஸ் ஸ்டாண்டிற்கு எந்த பக்கத்தில் அந்த Computer centre அமைந்துள்ளது என்றால் பஸ் ஸ்டாண்டிற்கு மேற்கே 100 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது, ஆண் ஒருவர்தான் தட்டச்சு செய்து கொடுத்தார்.

10. புகாரை தட்டச்சு செய்த நபருக்கு தகவலை யார் சொன்னது என்றால் நான் பெயர், விலாசம் சொன்னேன், நடந்த சங்கதிகளை கூறினேன், லஞ்ச ஒழிப்பு பிரிவிற்கு புகார் கொடுக்க வேண்டுமென்று சொல்லிதான் தட்டச்சு செய்ய சொன்னேன். காவல் நிலையத்திற்கு செல்லும்போது மணி என்ன இருக்கும் என்றால் காலை சுமார் 8.00 மணியிருக்கும். நான் சொல்வதுபோல், புகார் Computer center ல் வைத்து தட்டச்சு செய்யப்படவில்லை என்றும் மேற்படி புகாரானது ஊ.த.க பிரிவு காவல் நிலையத்தில் வைத்து போலிசார் சொன்னபடி தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

11. நான் சொன்ன தேதியில் புகார் எதுவும் கொடுக்கவில்லை, அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக காலதாமதமாக ஒரு புகார் தயார் செய்யப்பட்டு இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார் 12.05.2023 அன்று கொடுத்ததாக சொல்கிறேன்,ஆனால் மேற்படி புகாரானது நீதிமன்றத்திற்கு 16.05.2023 அன்றுதான் கிடைக்கப்பெற்றுள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையை யார் தயார் செய்தது என்றால் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ஜான் பிரிட்டோ அவர்கள் தயார் செய்தார். எவ்வளவு நேரம் முதல் தகவல் அறிக்கை தயார் செய்ய ஆகியது என்றால் சுமார் அரை மணிநேரம் இருக்கும்.

12. காவல் நிலையத்தில் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் முதல் தகவல் அறிக்கையில் ஒரு கையொப்பம் மட்டும் செய்தேன். நான் கொடுத்த புகாரில் 09.05.2023ம்தேதி எதிரியை சந்தித்ததாகவும், அதேபோல் 28.03.2023 அன்று எதிரியை சந்தித்ததாகவும், 10.04.2023 அன்று எதிரியை சந்தித்து கேட்டதாகவும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 28.03.2023ம் தேதி மனு கொடுக்கும் காலக்கட்டத்தில் 1வது எதிரி

லஞ்சப்பணம் எதுவும் கேட்டாரா என்றால் இல்லை, வீட்டைப்பார்த்துவிட்டு பிறகு பேசிக்கொள்ளலாம் என கூறினார். அரசு சாட்சி யார் யார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் காலை 9.45 மணிக்கு திரு.கணேசன் அவர்களும், அதன் பின் சுமார் 5, 10 நிமிடங்களில் திரு.பாலமுருகன் அவர்களும் வந்தார்கள்.

13. கணேசன் என்ன வேலை பார்க்கிறார் என்றால் மீன்வளத்துறையில் மேற்பார்வையாளராக பணிபுரிந்தார். பாலமுருகன் என்ன வேலை பார்க்கிறார் என்றால் ஊரக வளர்ச்சி துறையில் மேற்பார்வையாளராக பணிபுரிந்தார். காவல் நிலையத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் நிறைய நபர்கள் இருந்தார்கள், யார் யார் என்று அவர்களை குறிப்பிட்டு தெரியவில்லை. ஆய்வாளர் கண்ணன் என்பவர் இருந்தாரா என்றால் அப்போது அவரது பெயர் தெரியவில்லை. ஒப்படைப்பு மகஜரை யார் தயார் செய்தது என்றால் அவரது பெயர் துக்காராம் அவர் ஊ.த.க பிரிவு காவல் நிலையத்தில் இருந்தார். அவர் ஒப்படைப்பு மகஜரில் கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை, நான், பாலமுருகன், கணேசன், காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர்கள் மட்டும்தான் கையொப்பம் செய்தோம்.

14. எல்லாரும் ஒரே பேனாவில்தான் கையொப்பம் செய்தோமா என்றால் அது குறித்து ஞாபகமில்லை. ஒப்படைப்பு மகஜர் தயார் செய்ய எவ்வளவு நேரம் ஆகியது என்றால் சுமார் 15, 20 நிமிடங்கள் ஆனது. ஒப்படைப்பு மகஜர் மொத்தம் எத்தனை பக்கங்கள் தயார் செய்யப்பட்டது என்றால் மூன்று பக்கங்கள் உடையது, அந்த மூன்று பக்கங்களிலும் நான் கையொப்பம் செய்தேன். அப்போது நேரம் எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் காலை 10.15 இருக்கும். நான் சொல்வதுபோல் அன்றைய தினம் அரசு சாட்சிகளை எனக்கு பரஸ்பர அறிமுகம் செய்ய வைக்கவும் கிடையாது என்றாலும், மாதிரி பரிசோதனை எதுவும் செய்து காண்பிக்கவும் கிடையாது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒப்படைப்பு மகஜர் கடந்த 16.05.2023 அன்றுதான் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு கிடைக்கப்பட்டது என்றாலும், மேற்படி ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. மேற்படி ஒப்படைப்பு மகஜரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். நான் கொடுத்த ரூபாய் நோட்டுக்களின் எண்கள் குறிப்பிடப்பட்டது.

15. Disposable glass என்பதும் வெள்ளை நிற பிளாஸ்டிக் டம்ளர்

என்பதும் வெவ்வேறானது என்றால் ஆமாம். Disposable glass தான் பயன்படுத்தினார்கள். வெள்ளை நிற பிளாஸ்டிக் டம்ளரை பயன்படுத்தவில்லை என்றால் சரிதான். என்ன பவுடர் கலந்தார்கள் என்றால் சோடியம் கார்பனேட் பவுடரை கலந்தார்கள். ரூபாய் நோட்டில் என்ன பவுடர் தடவினார்கள் என்றால் பினாப்தலீன் பவுடர் தடவினார்கள். பினாப்தலீன் பவுடர், சோடியம் கார்பனேட் இரண்டும் என்ன நிறத்தில் இருந்தது என்றால் இரண்டுமே வெள்ளை நிறத்தில் இருந்தது. பினாப்தலீன் பவுடர் நைஸ் தூளாக இருந்தது. இரண்டிற்கும் வித்யாசம் தெரிந்தது. கரைசல்களை கொட்டி அழிக்கும்போது நேரம் என்ன என்றால் சரியாக தெரியவில்லை.

16. எத்தனை மணிக்கு காவல் நிலையத்திலிருந்து கிளம்பினோம் என்றால் சுமார் 10.30 மணிக்கு கிளம்பினோம். நான் எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் அரசு வாகனத்தில் சென்றேன். மொத்தம் எத்தனை நபர்கள் அந்த வாகனத்தில் சென்றோம் என்றால் நாங்கள் ஆறு நபர்கள் சென்றோம். போலிசார், ஆய்வாளர் ஆகிய அனைவரும் என்னுடன் வந்தார்களா என்றால் ஆமாம். காவல் துணை கண்காணிப்பாளரும் என்னுடன் வந்தார். அன்றைய தேதியில் நான்

சென்ற போது 1 எதிரி அலுவலகத்தில் இருந்தாரா என்றால் ஆமாம், காலை 11.00 மணியளவில் அலுவலகத்தில் இருந்தார். அப்போது பஞ்சாயத்து கிளார்க் அங்கிருந்தாரா என்றால் இல்லை. அலுவலகத்தில் 3, 4 பெண் ஊழியர்கள் மட்டும் இருந்தார்கள். அந்த நேரத்தில் நான் அவரிடம் பணம் எதுவும் கொடுத்தேனா என்றால் அவர் கேட்காததால் நான் கொடுக்கவில்லை. அந்த சமயத்தில் நான் வரிபாக்கியை செலுத்தவில்லை என்றால் ஆமாம்.

17. அதனால் பொறிவைப்பு சம்பவம் தோல்வியடைந்த காரணத்தினால் நாங்கள் திரும்ப வந்து விட்டோமா என்றால் ஆமாம். 1 வது எதிரி மீண்டும் மாலை போன் செய்வதாக சொன்னார், அதனால் வந்துவிட்டேன். என்னுடையது தொலைபேசி எண் என்ன என்றால் 9342482095 ஆகும். 1 வது எதிரியின் தொலைபேசி எண் என்ன என்றால் ஞாபகத்தில் இல்லை, எனது அலைபேசியில் பதிவு செய்து வைத்திருந்தேன். நான் Android போன் தான் வைத்துள்ளேனா என்றால் ஆமாம். அது என்ன போன் என்றால் நான் அந்த சமயத்தில் Vivo Y30 வைத்திருந்தேன். மாலை நான்தான் 1 வது எதிரிக்கு போன் செய்தேன். அப்போது நேரம் என்னவென்றால் மாலை சுமார் 3.00 மணியிருக்கும்.

அதுவரை போலிஸ் பார்ட்டியினர் மற்றும் அரசு சாட்சிகள் அங்கிருந்தார்களா என்றால் ஆமாம்.

18. 1வது எதிரிக்கு அங்கு உள்ளூரிலே வீடு என்றால் சரிதான். மாலை நான் போன் செய்து எங்கு வரவேண்டும் என்று கேட்டேனா என்றால் ஆமாம், நான் கேட்டதற்கு 1வது எதிரி நான் Meeting ல் இருப்பதாகவும், அதனால் திங்கள்கிழமை வருமாறும் கூறினார். எந்த ஊரில் Meeting ல் இருந்தார் என்றால் அது குறித்து சொல்லவில்லை. நான் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்றுதான் 1வது எதிரிக்கு போன் செய்தேன். அப்போது 1வது எதிரி வீட்டில் வந்து கொடுங்கள் என்றோ, பொது இடத்தில் வந்து கொடுங்கள் என்றோ, சனி, ஞாயிறாவது வந்து கொடுங்கள் என்று கூறினாரா என்றால் இல்லை.

19. அன்றைய தினமும் பொறிவைப்பு சம்பவம் தோல்வியடைந்த காரணத்தில் நான் காவல் நிலையத்திற்கு திரும்ப வந்துவிட்டேன் என்றால் சரிதான். அங்கு வைத்து தான் மகஜரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அன்றைய தேதியில் நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் பக்கங்கள் ஞாபகமில்லை, ஆனால் நான், இரண்டு அரசு சாட்சிகள் மற்றும் காவல் துணை

கண்காணிப்பாளர் ஆகியோர் கையொப்பம் செய்தோம். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால் அன்றைய தினம் நடந்த விபரங்கள் அதில் எழுதப்பட்டிருந்தது.

20. அன்றைய தினம் நான் 1வது எதிரியிடம் போன் மூலமாக பேசியதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அ.த.சா.ஆ–6 வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. 15.05.2023 அன்று நான் எத்தனை மணிக்கு கிளம்பினேன் என்றால் காலை 8, 8.15 மணியளவில் ஊ.த.க பிரிவு காவல் நிலையத்திற்கு வந்து விட்டேன். அரசு சாட்சிகள் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் நான் வந்தபிறகு 5, 10 நிமிடங்களில் ஒருவர் பின் ஒருவராக வந்துவிட்டார்கள். அதன்பின் காவலர்களும் அங்கு வந்துவிட்டார்கள். அன்றைய தேதியில் பணத்தில் பினாப்தலீன் பவுடர் தடவப்பட்டதா என்றால் இல்லை. அன்றைய தேதியில் சோதனையும் செய்து காண்பிக்கப்படவில்லை என்றால் ஆமாம். கல்லல் ஊராட்சி மன்ற அலுவலகம் ஆட்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் பகுதி என்றால் ஏதாவது விஷேசம் இருந்தால் மட்டும்தான் அந்த பகுதி கூட்டமாக காணப்படும். நான் சென்றவுடன் திங்கள்கிழமை காலை வரச்சொன்னீர்களே வரவா என்று 1வது எதிரிக்கு தொலைபேசியில்

கேட்டேனா என்றால் இல்லை. நான் அங்கு சென்று பார்க்கும்போது அலுவலகம் பூட்டப்பட்டிருந்தது.

21. எத்தனை மணிக்கு போன் செய்தேன் என்றால் நேரம் சரியாக நினைவில்லை, சுமார் 10.30, 11.00 மணியிருக்கும். ஊராட்சி செயலாளர் அங்கிருந்தாரா என்றால் இல்லை, அலுவலகம் பூட்டப்பட்டிருந்தது. நான் ஊராட்சி செயலாளருக்கு போன் மூலம் தொடர்பு கொண்டு வரி செலுத்த வந்திருப்பதாக கூறினேனா என்றால் இல்லை, 1வது எதிரிக்குதான் போன் செய்து கூறினேன். ஊராட்சி செயலாளரை சந்தித்து எவ்வளவுவரி பாக்கி உள்ளது, எவ்வளவு நாட்களுக்குள் செலுத்தவேண்டும் என்பதை நான் கேட்டுத் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அன்று காலையும் பொறிவைப்பு சம்பவம் தோல்வி அடைந்ததால் காவல் நிலையத்திற்கு திரும்ப வந்துவிட்டோம் என்றால் சரிதான். அங்கு மாலையாவது போன் செய்தேனா என்றால் ஆமாம். நான் திரும்ப எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் நான் அங்கேயே காத்திருந்து மாலை 4.00 மணிபோல் அவரது அலுவலகத்திற்கு சென்றேன். அப்போதும் அலுவலகம் பூட்டப்பட்டிருந்தது அவர் தொலைபேசியில் என்னிடம் வருவதற்கு நேரம் ஆகிவிடும் என்றும் கூறினார்.

22. 1வது எதிரி வருவதற்கு நேரம் ஆகிவிடும் என்று என்னிடம் கூறிய விபரத்தை நான் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் ஆமாம். திரும்பவும் நான் மற்றும் போலிஸ் பார்ட்டியினர் சேர்ந்து தான் அந்த இடத்திற்கு வந்தோம் என்றால் ஆமாம். அன்றையதினமும் பொறிவைப்பு சோதனை தோல்வியடைந்து காவல் நிலையத்திற்கு திரும்ப வந்து விட்டோம் என்றால் சரிதான். அந்த மகஜரும் காவல் நிலையத்தில் வைத்துதான் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். அப்போது மணி என்ன இருக்கும் என்றால் மாலை 6.00, 6.30 மணிக்கு மேல் இருக்கும். அ.த.சா.ஆ–8 ஆவணத்தை யார் தயார் செய்தது என்றால் துக்காராம் என்ற காவலர்தான் தட்டச்சு செய்தார். அது மொத்தம் எத்தனை பக்கங்கள் என்றால் இரண்டு பக்கங்கள் உடையது. மேற்படி ஆவணம் வழக்கிற்காக காவலர் மூலமாக காலதாமதமாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

23. நான் கல்லலில்தான் இருப்பதாக போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான்கு நாட்களாக ஒரே சட்டையில்தான் 1வது எதிரியை பார்ப்பதற்கும், காவல் நிலையத்திற்கும் வந்தேனா என்றால் இல்லை, வெவ்வேறு சட்டை அணிந்துதான் சென்றேன். ஒவ்வொரு முறையும் பணத்தை தொட்டு எடுத்துதான்

பணத்தை எடுத்து வேறு சட்டையில் வைத்தேனா என்றால் ஆமாம். 16.05.2023ம் தேதி எனது சட்டைப்பையில் யார் பணத்தை வைத்தார் என்றால் அரசு சாட்சி கணேசன் என்பவர் வைத்தார், எல்லா நாட்களும் அவர்தான் பணத்தை எனது சட்டைப்பையில் வைத்தார். நான் பணத்தை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை, பணத்தை கணேசனிடம் கொடுத்தேன்.

24. அன்றையதினம் நான் எத்தனை மணிக்கு புறப்பட்டோம் என்றால் சுமார் 10.30 மணியிருக்கும். என்னுடன் காவல் துணை கண்காணிப்பாளர், ஆய்வாளர் கண்ணன், போலிஸ் பார்ட்டி ஆகியோர்கள் வந்தார்களா என்றால் ஆமாம். 16.05.2023 அன்று காலையில் தயாரிக்கப்பட்ட ஒப்படைப்பு மகஜரை யார் தயார் செய்தது என்றால் காவலர் துக்காராம் என்பவர்தான் தயார் செய்தார். அன்றைய தினமும் அலுவலகம் பூட்டிதான் இருந்தது என்றால் சரிதான். அவர் வீட்டிற்கு செல்வதற்கோ, அவரை சந்திப்பதற்கோ முயற்சி எடுக்கவில்லை என்றால் நான் அவருக்கு தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு பேசினேன். என்னுடைய தொலைபேசி Call details–ஐ பார்த்தால் நான் எந்த தேதியில் எத்தனை மணிக்கு அவரிடம் பேசினேன் என்பது குறித்து தெரியும் என்றால் ஆமாம்.

நான் 1வது எதிரியுடன் பேசும்போது தொலைபேசியில் பதிவு செய்தேனா என்றால் இல்லை.

25. நான் சொல்வதுபோல் 1வது எதிரியிடம் பேசியது, அவரை வரச்சொன்னது ஆகிய அனைத்தும் வழக்கிற்கான பொய்யான சங்கதிகள் ஆகும் என்றால் சரியல்ல. 1வது எதிரியிடமிருந்து தான் எந்த இடத்தில் இருக்கிறேன் என்பதை கூறி என்னை வரச்சொல்லியிருந்தாரா என்றால் இல்லை, நான்தான் அவருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். பஸ் ஸ்டாண்டுக்கும், உடையப்பா பேக்கரிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ஒரு ரோடை தாண்டி சென்றால் உடையப்பா பேக்கரிக்கு சென்று விடலாம். அது எப்போதும் ஆட்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிதான் என்றால் சரிதான். உடையப்பா பேக்கரியிலும் எதிரி இல்லாத காரணத்தினால் அந்த சமயத்திலும் பொறிவைப்பு நடவடிக்கை தோல்வியடைந்தது என்றால் சரியல்ல, நான் 1வது எதிரிக்கு போன் செய்து நான் ரொம்ப நேரமாக அங்கு நின்று கொண்டிருப்பதாக கூறினேன். அப்போது நேரம் என்ன இருக்கும் என்றால் சுமார் 11.30 மணியிருக்கும்.

26. உடையப்பர் பேக்கரிக்கு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் ஆய்வாளர் ஆகியோர்கள் வந்தார்களா என்றால் இல்லை,

என்னுடன் பாலமுருகன் மட்டும் பக்கத்தில் இருந்தார். நான் காவல் துணை கண்காணிப்பாளருக்கு 1வது எதிரி வரவில்லை என்பதை சைகை மூலமாக கூறினேன். அங்கிருந்து அய்யனார் மண்டபம் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 200 மீட்டர் தூரத்தில் இருந்தது. 1வது எதிரி காரில் வந்தாரா என்றால் இல்லை, பைக்கில் வந்தார்கள். 1வது எதிரிக்கு காரே கிடையாது என்றாலும், 2வது எதிரி அவரது ஓட்டுநர் இல்லை என்றாலும் சரியல்ல. 2வது எதிரி யார் எந்த ஊரை சேர்ந்தவர் என்று புகார் கொடுக்கும் சமயத்தில் எனக்கு தெரியுமா என்றால் அந்த சமயத்தில் தெரியாது.

27. 1வது எதிரி ஓட்டி வந்த வாகனத்தின் எண் தெரியுமா என்றால் தெரியாது. போலிஸ் பார்ட்டியினர் பைக்கில்தான் வந்தார்களா என்றால் இல்லை, காரில்தான் வந்தார்கள். போலிஸ் பார்ட்டியினர் எந்த பக்கம், எந்த திசையில் நின்றார்கள் என்றால் மேற்கே, கல்லல் வாகன ஸ்டேண்டில் 100 மீட்டர் தூரத்தில் நின்றார்கள். அந்த இடத்தில் ஒரு குளம் இருக்கிறது என்றால் மண்டபத்திற்கு பின்புறத்தில் ஒரு குளம் இருக்கிறது. மண்டபத்திற்கு மேற்கே ஒரு பிள்ளையார் கோவிலும், வீடுகளும் வரிசையாக உள்ளது. டீக்கடை அய்யனார் மண்டபத்தின் அருகே

இருந்ததா என்றால் இல்லை.

28. நான் சென்ற டீக்கடை யாருக்கு சொந்தமானது என்றால் மாஸ்டர் என்ற பெயர் கொண்ட டீக்கடை, அது யாருக்கு சொந்தம் என்று எனக்கு தெரியாது. 1, 2 எதிரிகள் ஒரே பைக்கில் வந்தார்களா என்றால் இல்லை, நாச்சியப்பன் மட்டும் தான் பைக்கில் வந்தார், சங்கர் கணேஷ் ஏற்கனவே டீக்கடையில் உட்கார்ந்திருந்தார். அப்போது மணி என்ன இருக்கும் என்றால் 11.50 இருக்கும். அப்போது 1வது எதிரி லஞ்சப்பணம் வாங்கவில்லை என்றால் ஆமாம், 1வது எதிரி சங்கர் கணேஷிடம் ரசீது சம்பந்தமாக பணத்தை என்னிடமிருந்து வாங்கி வைத்துக் கொள்ளுமாறு கூறினார். அப்போது கடை கூட்டமா இருந்தது. 1, 2 எதிரிகள் கடையிலிருந்து வெளியே வந்தார்கள். தேரடி முக்கிற்கு சென்று நின்று கொண்டு 1வது எதிரி கைகளை பின்னால் கட்டிக்கொண்டு 2வது எதிரியிடம் பணத்தை கொடுக்குமாறு என்னிடம் கூறினார், நான் கொடுத்தேன். தேரடி முக்கில் ஆட்கள் நடமாட்டம் இல்லை என்றால் சரிதான். 1வது எதிரி என்னிடம் லஞ்சப்பணத்தை கேட்டு வாங்கவில்லை என்றால் சரிதான். 2வது எதிரியிடம் கொடுக்குமாறு 1வது எதிரிதான் கூறினார். வழக்கிற்காக நான் மேற்படி சங்கதியை பொய்யாக கூறுகிறேன்

என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் என்னுடன் யாரும் வரவில்லை என்றால் சரியல்ல, என்னுடன் பாலமுருகன் இருந்தார்.

29. பாலமுருகன் என்னுடன் வந்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதன் பின்பு போலிஸ் பார்ட்டியினர் 1வது எதிரியை அழைத்துக்கொண்டு காவல் நிலையத்திற்கு வந்து விட்டனர் என்றால் நான் சைகை காண்பித்தவுடன் போலிஸ் பார்ட்டியினர் வந்தார்கள், அதன் பின்பு என்னை கிளம்ப சொல்லிவிட்டார்கள். அதனால் அவரை எங்கு அழைத்துச் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. 1, 2 எதிரிகளை போலிசார் சோதனை செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. டீக்கடைக்கும், தேரடி முக்கிற்கும் சுமார் 50 அடி தூரம்தான் இருக்கும் என்றால் இல்லை, சுமார் 100 அடி இருக்கும். தொடர்ந்து வீடுகள் இருக்கும் என்றால் இல்லை, தேரடிக்கு எதிரே கோவில் உள்ளது. 1வது எதிரி எந்த காலத்திலும் என்னிடம் லஞ்சப்பணம் கேட்கவும் இல்லை, பெறவும் இல்லை என்றால் லஞ்சப்பணம் கேட்டார் ஆனால் அவர் என்னிடம் லஞ்சப்பணத்தை பெறவில்லை, சங்கர் கணேஷிடம் கொடுக்கச் சொன்னார். தொடர்ந்து 4 நாட்களாக பொறிவைப்பு நடவடிக்கை தோல்வி அடைந்ததால் 1வது

எதிரியிடம் நான் கட்டாயப்படுத்தி பணம் கொடுக்க முயற்சி செய்தும் அவர் பணத்தை வாங்க முடியாது என்று தனது கையை பின்னால் கட்டிக் கொண்டார் என்றாலும், அதனால் அவர் அருகில் பேசிக் கொண்டிருந்த 2 வது எதிரியிடம் பணத்தை நான் கட்டாயப்படுத்தி அவரது சட்டைப்பையில் வைத்தேன் என்றால் சரியல்ல, 1 வது எதிரி சொல்லி 2 வது எதிரி என்னிடமிருந்து பணத்தை அவரது கையில் வாங்கி எண்ணி அவரது சட்டைப்பையில் அவரே வைத்துக் கொண்டார். என்னை இவ்வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் யாரேனும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் சம்பவத்திற்கு மறுநாள் காலை 10.00 மணிக்கு ஆய்வாளர் என்னை வரச்சொல்லி விசாரணை செய்தார்.

30. அதன் பிறகு என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. அந்த சமயம்வரை நான் நிலுவையில் இருந்த வரிப்பாக்கியை செலுத்தவில்லை என்றால் சரிதான். பஞ்சாயத்து கிளார்க் Strike ல் இருந்ததாலும், நான் வரி பாக்கியை செலுத்தாத காரணத்தினாலும் பெயர் மாற்றம் செய்வற்கு காலதாமதம் ஆனதினால் எதிரி மீது வன்மம் கொண்டு எதிரி மீது பொய் புகார் கொடுத்து அவருக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, அவர்

என்னிடம் லஞ்சப்பணம் கேட்டதாகத்தான் நான் புகார் கொடுத்தேன். 1வது எதிரி என்னிடம் லஞ்சப்பணம் கேட்கவும் கிடையாது, நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எல்லா ஆவணங்களுமே வழக்கின் தோதிற்காக காலதாமதமாக 16.05.2023 அன்றுதான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

<u>2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. நான், 1, 2 எதிரிகள் ஆகிய மூவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் கோயம்புத்தூரில் Electrician ஆக ஒரு நிறுவனத்தில் பணிபுரிகிறேனா அல்லது தனியாக வேலை செய்கிறேனா என்றால் ஒரு நிறுவனத்தில் லேபராக பணிபுரிகிறேன். எனக்கு விடுமுறை எப்போது கிடைக்கும் என்றால் வாரத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை, அதுதவிர தேவைக்கேற்ப விடுப்பு எடுத்துக் கொள்ளலாம். நான் 1வது எதிரியிடம் கொடுத்ததாக சொல்லும் மனுவில் சொத்து குறித்து சர்வே எண்ணோ, வீட்டிற்குரிய கதவு எண்ணோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த மனுவில் தேதியும்

குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

2. பொதுவாக ஒரு அலுவலரிடம் மனு கொடுத்தால் அதில் அந்த அலுவலர் சுருக்கொப்பம் செய்வது வழக்கம் என்றாலும், இந்த மனுவில் எந்த சுருக்கொப்பமும் இல்லை என்றால் சரிதான், 1வது எதிரி மனுவை பெற்று அவரது டேபிளில் வைத்துவிட்டார். அ.த.சா.ஆ.2 மனுவிற்குரிய நகல் எதுவும் எனது கைவசம் உள்ளதா என்றால் இல்லை. தானம் settlement ல் சொல்லப்பட்டுள்ள சொத்திற்கு எத்தனை ஆண்டுகளா வரி பாக்கி நிலுவையில் இருந்தது என்றால் இரண்டு ஆண்டுகளாக நிலுவையில் இருந்தது. இதற்கு முன்பு எனது தகப்பனார் தான் வரிகளை செலுத்தி வந்தார் என்றால் சரிதான்.

3. நான் 28.03.2023 முதல் 16.05.2023 வரை எத்தனைமுறை கோயம்புத்தூர் சென்று கல்லலுக்கு வந்தேன் என்றால் சுமார் 3, 4 முறை சென்று வந்தேன். விடுமுறையில் வந்தேனா என்றால் நிறுவனத்திடம் விடுப்பு எடுப்பது குறித்து சொல்லிவிட்டுதான் வந்தேன். 28.03.2023 முதல் 16.05.2023 வரை நான் 2வது எதிரியை பார்த்தது கிடையாது என்றால் சரிதான். அவர் என்ன வேலை பார்க்கிறார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, அவர் Acting Driver ஆக வேலை பார்த்து

வருகிறார் என்று எனக்கு தெரியும். 2 வது எதிரிக்கு சொந்தமாக நான்கு சக்கர வாகனம் எதுவும் கிடையாது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 2 வது எதிரி அரசு ஊழியர் கிடையாது என்றால் சரிதான்.

4. 2 வது எதிரி என்னிடம் தனிப்பட்ட முறையில் பணம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். 28.03.2023 முதல் 16.05.2023 வரை 2 வது எதிரியிடம் தொலைபேசியில் நான் பேசியதோ, அவர் என்னை தொடர்பு கொண்டு பேசியதோ கிடையாது என்றால் சரிதான். 28.03.2023 முதல் 16.05.2023 வரை எனக்கும் 1 வது எதிரிக்கும் என்ன நடந்தது என்ற விபரம் 2 வது எதிரிக்கு தெரியாது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. டீக்கடையில் என்னை பார்த்துவிட்டு 1 வது எதிரி கூட்டமாக இருப்பதால் தனியாக வருமாறு கூறியதாக நான் சொல்லும் நிலையில் என்னுடன் இருந்த அரசு சாட்சி யார் என்பது குறித்து 1 வது எதிரி கேட்கவில்லையா என்றால் ஆமாம், அது குறித்து கேட்கவில்லை.

5. உண்மையில் என்னுடன் அரசு சாட்சி யாரும் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல, அவர் என்னுடன்தான் நின்றுகொண்டிருந்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் நான் தனிப்பட்ட முறையில் Video எதுவும்

எடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல், 1வது எதிரிக்கு நான்கு சக்கர வாகனம் எதுவும் கிடையாது என்றாலும், 2வது எதிரி 1வது எதிரியிடம் ஓட்டுநராக பணிபுரிவது கிடையாது என்றாலும் சரியல்ல, 1வது எதிரியிடம் இனோவா கார் உள்ளது. 1வது எதிரியிடம் எந்த வாகனமும் கிடையாது என்றாலும் வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. 2வது எதிரி டீக்குடிக்க டீக்கடையில் 1வது எதிரி அருகே நின்று கொண்டிருந்தவரிடம் நான் 1வது எதிரி பணம் வாங்காத நிலையில் கட்டாயப்படுத்தி 2வது எதிரியின் கையில் பணத்தை கொடுத்தேன் என்றால் சரியல்ல. வரி ரசீது பெயர் மாற்றம் தொடர்பாக என்னால் ஏற்பட்ட தவறுகளால் உடனடியாக என் பெயரில் வரி ரசீது ஏற்படாத காரணத்தினாலும் அதற்கு 1வது எதிரிதான் காரணம் என்று நான் எண்ணிக்கொண்டு அவரை பழிவாங்க வேண்டும் என்று எண்ணி பொய்யாக ஒரு புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. புகாரில் நான் 2வது எதிரி குறித்து எவ்வித குறிப்பும் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் 2வது எதிரிக்கும்

எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் கோயம்புத்தூரில் பணிபுரிந்த நிறுவனத்தில் அடிக்கடி விடுமுறை எடுத்த காரணத்தினாலும், கல்லலில் உடனடியாக வரி ரசீது பெயர் மாற்றம் செய்யப்படாத காரணத்தினாலும் அதனால் 1வது எதிரி மீது ஏற்பட்ட விரோதத்தின் அடிப்படையில் இந்த வழக்கில் பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.03.12 17:59:05 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.